IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 119/2011

சாட்சி : PW1

பெயர் : ஜெயகோபால் தேதி: 05-02-2024

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

வரைவு கிரய பத்திரம் தயார் செய்து வைக்கவில்லை. பாக்கி கிரய தொகையை இதுநாள் வரை இந்த வழக்கில் வைப்பீடு செய்யவில்லை என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A1ல் கையால் எழுதிவிட்டு பின்னர் அடித்துள்ளோம் ஏனென்றால் அந்த கிரய பாக்கித் தொகை செலுத்துவதற்கு என்னிடம் பாக்கி பணம் இல்லாததால் தான் அடித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ-A1ல் 6வது பக்கத்தில் முதல் பத்தியில் பாக்கி கிரய தொகை கொடுத்து கிரய காலக்கட்டத்தில் கிரயம் செய்ய தவறும் பட்சத்தில் கொடுத்த முன்பணத் தொகையை இழந்துவிட வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கை நான் தாக்கல் செய்த போது நீதிமன்ற கட்டணம் செலுத்ததால் திருப்பப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னர் நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாக்கி கிரய தொகையை செலுத்த வசதி இல்லை என்றும், அதனால் தான் முத்திரை கட்டணம் செலுத்தாமல் வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்து கிரய உடன்படிக்கைக்கு உட்பட்டதல்ல என்று பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் 2ம் வாதியின் நண்பர் என்பதால் பத்திரம் எழுதி கையெழுத்து வாங்கி பின்னிட்டு கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. **(எதிர் வழக்குரையில் குறிப்பிடதா சங்கதிகளை குறுக்கு விசாரணையில் கேட்பதாக வாதி தரப்பில்**

**ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).** எனவே தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>6 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2ம் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் குடும்ப நண்பர்கள் என்றால் ஆமாம். 2ம் வாதி மூலமாகத்தான் சொத்தை கிரயம் வாங்குவதற்காக கிரய உடன்படிக்கை செய்துகொண்டோம் என்றால் ஆமாம். தாவா சொத்து சேலம் ரவுண்டனா காவல் நிலையம் மற்றும் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ளது என்றால் ஆமாம். கிரய உடன்படிக்கை செய்வதற்கு முன்பு தாவா சொத்தின் மூல ஆவணங்களை பார்வையிட்டேன். சட்ட கருத்துரை வழக்கறிஞரிடம் வாங்கினேன். எழுத்து மூலமாக வாங்கவில்லை. கிரய உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 2ம் வாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். 26.06.1987 உடைய உயிலின் ஜெராக்ஸ் நகலை பார்த்தேன். முதன்னை நீதிமன்றம், சேலம் அசல் வழக்கு எண். 353/2001 என்ற வழக்கின் தீர்ப்பு நகலை நான் படித்து பார்க்கவில்லை. அந்த தீர்ப்பில் தானசெட்டில் பத்திரமும், உயில் சாசனமும் சட்டப்படி செல்லாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். AS. 26/2005 மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு நகலை நான் படித்து பார்க்கவில்லை. வழக்கறிஞர் படித்து பார்த்து கூறினார். சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு எண். SA.No. 537/2006 நிலுவையில் இருந்து வருவது பற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படி இரண்டாவது மேல்முறையீடு 2006ம் வருடத்தில் இருந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் அந்த விவரம் தெரியும் என்றும், அதை மறைத்து வா.த.சா.ஆ–A1 கிரய உடன்படிக்கை

ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மட்டும் சட்ட அறிவிப்பு கொடுத்து அவர்களுக்கெதிராக முதலில் இந்த வழக்கு போட்டேன் என்றால் ஆமாம். தாவா சொத்தில் யார் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்று நான் கிரய உடன்படிக்கை செய்வதற்கு முன்பு நேரடியாக லட்சுமணன் உடன் சென்று பார்த்தேன். அவ்வாறு நாங்கள் செல்லவில்லை என்றும், பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து கிரய உடன்படிக்கை போடுவதற்கு முன்பிலிருந்து இன்றைய தேதி வரை 6 முதல் 10 பிரதிவாதிகளின் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. 6 முதல் 10 பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்தபோது இரண்டாம் மேல் முறையீடு நிலுவையில் இருந்து வரும் விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். இரண்டாம் மேல் முறையீடு 17.12.2014 ம் தேதி சென்னை உயர்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்காக தெரியாது என்று தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 6 முதல் 10 பிரதிவாதிகள் உரிமையான வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டி வாதிகளான நாங்களும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து கொண்டு மோசடியாக வழக்கு நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தவா சொத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும், எனவே அவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட வா.த.சா.ஆ–A1 கிரய உடன்படிக்கை சட்டப்படி செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ–A3 மற்றும் வா.த.சா.ஆ–A6 ஆகிய இரு அறிவிப்புகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கொடுத்துள்ளேன் என்று சொன்னால் ஆமாம். வா.த.சா.ஆ–A1 பெயரளவில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றும் அதனால்

தான் இரண்டு அறிவிப்புகள் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. முன்பணம் ரூ. 20,00,000/- 1ம் வாதி எவ்வளவு தொகை, 2ம் வாதி எவ்வளவு தொகை கொடுத்தோம் என்று வழக்குரை, அறிவிப்பு மற்றும் முதல் விசாரணையில் குறிப்பாக கூறவில்லை என்றால் ஆமாம். வருமான வரிக்கணக்கில் என்னுடைய பங்கு எவ்வளவு தொகை முன்பணம் கொடுத்ததை வரவு வைத்துள்ளேன் என்று குறிப்பாக கூறவில்லை என்றால் ஆமாம். தவா சொத்து 1 முதல் 5 மற்றும் 11,12 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தால் தாவா சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லை என்று தீர்மானிக்கப்பட்ட நிலையில் நான் அவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரய உடன்படிக்கை வா.த.சா.ஆ-A1 செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ-A1 படி ரூ.20,00,000/- முன்பணம் கொடுத்ததாக கூறிவிட்டு முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் ரூ.25,00,000/- முன்பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். மாற்று பரிகாரமாக முன் பணத்தை திருப்பித் தரவேண்டும் என்று வழக்கில் வேண்டுகோள் ஏதும் வைக்கவில்லை என்றால் ஆமாம். 6 முதல் 10 பிரதிவாதிகளை ஏமாற்றுவதற்காக எவ்வித முன்பணமும் கொடுக்காமல் 1 முதல் 5 பிரதிவாதிகளிடம் வா.த.சா.ஆ-A1 கிரய உடன்படிக்கை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.